தினகரன் 13.03.2018

# டிஎன்பிஎல் சார்பில் வாழும் கலை கருத்தரங்கு



டிஎன்பிஎல் சார்பில் பொதுமக்களுக்கு வாழும் கலை குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.

க.பரமத்தி, மார்ச்13: டிஎன்பிஎல் சார்பில் வாழும் கலை பயிற்சி வழங்கப்பட்டது.

கரூர் ஒன்றியம், காகிதபுரம் பேரூராட்சியில் இயங்கி வரும் டிஎன்பிஎல் நிறுவன சமுதாய நலப்பணித் திட்டம் சார்பில் காகிதபுரம், புஞ்சைபுகளூர், புஞ்சைதோட்டக்குறிச்சி பேரூராட்சிகள் திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம், நஞ்சைபுகளூர் ஊராட்சி பகுதிகளில் வாழும் கலை பயிற்சி பற்றி இலவச கருத்தரங்கு நடைபெற்றது. இந்த பயிற்சி 6 நாட்கள் நடைபெற்றது. தொடக்க நிறைவு விழாவிற்கு முதுநிலை மேலாளர் (மனிதவளம்) ராஜாராம் வரவேற்றார். பொது மேலாளர் (மின்சாரம் மற்றும் கருவியியல்) பாலசுப்பிரமணியன் தலைமை வகித்தார். காகித நிறுவன செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

வாழும் கலை பயிற்சி பற்றி பொள்ளாச்சி வாழும் கலை மைய ஆசிரியர் சுரேஷ் தலைமையிலான குழுவினர் பயிற்சி அளித்தனர்.